RNI-NO: TNTAM/2021/83936




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 176 | ஜூலை.2 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# வெளியானது பொறியியல் தரவரிசை பட்டியல்: 53 பேர் முழு கட்ஆஃப் பெற்று அசத்தல் : கலந்தாய்வு தேதி அறிவிப்பு

சென்னை: ஜூலை.2-

தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரிகளில் சேர் விண்ணப்பித்த மாணவர்களுக்கான தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் 53 பேர் 200க்கு 200 கட் ஆஃப் மதிப்பெண்கள் பெற்று அசத்தியுள்ளனர்.

சென்னை கிண்டியில் உள்ள தொழில்நுட்ப கல்வி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2026-27 கல்வி ஆண்டில் பொறியியல் படிப்பில் சேர்வதற்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கான தரவரிசை பட்டியலை உயர் கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் வெளியிட்டார். பொதுப்பிரிவு மற்றும் அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவீத இடஒதுக்கீடு என தனித்தனியாக தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தாண்டு பொறியியல் படிப்பில் சேர்க்கை பெற விண்ணப்பித்து கட்டணம் செலுத்தியவர்கள் 2,45,235 பேர். இவர்களில் மூன்றாம் பாலினத்தவர்கள் 5 பேர் உட்பட 2,36,017 பேர் தரவரிசையில் இடம்பெற்றுள்ளனர்.

அதே போன்று, 7.5 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் 50,494 பேர் விண்ணப்பித்த நிலையில், துறையால் வழங்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் 46,604 பேர் தரவரிசையில் இடம்பெற்றுள்ளனர்.

53 பேர் முழு கட் ஆஃப் பெற்று அசத்தல்

இந்தாண்டு 53 பேர் 200க்கு 200 கட் ஆஃப் மதிப்பெண்கள் பெற்று அசத்தியுள்ளனர். அதில் 39 பேர் தமிழ்நாடு பாடத்திட்டத்தில் படித்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தரவரிசை பட்டியலை https://www.tneaonline.org/ என்ற இணையதளத்தில் காணலாம்.



கலந்தாய்வு தேதிகள் அறிவிப்பு

முதற்கட்டமாக 7.5 இடஒதுக்கீட்டின் கீழ் சிறப்புப் பிரிவு மாணவர்களுக்கு வரும் ஜூலை 13 மற்றும் 14 ஆகிய நாட்களில் கலந்தாய்வு நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இதர சிறப்புப் பிரிவு மாணவர்களுக்கு 15 மற்றும் 18 ஆகிய தேதிகளில் கலந்தாய்வு நடைபெறும்.

பொதுப்பிரிவு பொறியியல் கலந்தாய்வு ஜூலை 20 முதல் 30 வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பிரிவுகளுக்கான தரவரிசையில் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.அக்ஷிதா என்ற மாணவி முதல் மதிப்பெண் பெற்று அசத்தியுள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த ஏ.ரோஹித் பாலன் என்ற மாணவர் இரண்டாம் இடமும், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.வெங்கடகிருஷ்ணன் என்ற மாணவர் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளார்.

7.5 சதவீத இடஒதுக்கீடு பிரிவில் சேலம் அரசு மாதிரி பள்ளியை சேர்ந்த மாணவி பி.தேவதர்ஷினி முதலிடம் பிடித்து அசத்தியுள்ளார். திருச்சி டி.என்.அரசு மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த மாணவர் கே.புகழேஷ் இரண்டாம் இடமும், திருவண்ணாமலை அரசு மாதிரி பள்ளியை சேர்ந்த மாணவர் ஆர்.ஜனார்த்தனம் மூன்றாம் இடமும் பிடித்துள்ளார்.

தரவரிசையில் பெயர் சேர்க்க 6ம் தேதி வரை அவகாசம்

விண்ணப்பித்திருந்து தரவரிசை பட்டியலில் தங்களது பெயர் விடுபட்டு இருந்தாலோ அல்லது வேறு குறைகள் இருந்தாலோ, இன்று முதல் 6 நாட்களுக்குள் (06.07.2026க்குள்) தங்கள் அருகாமையில் உள்ள தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கை சேவை மையத்தினை (TFC's) அணுகி தங்கள் குறைகளை பதிவு செய்து நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

மேலும், பொறியியல் கலந்தாய்வு தொடர்பாக சந்தேகங்களை நிவர்த்தி செய்ய தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் செயல்பட்டு வரும் அழைப்பு மையத்தினை தொலைபேசி (18004250110) வாயிலாகவும், tneacare@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

## ஊழல் வழக்கில் நேரில் ஆஜராக முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுவுக்கு லஞ்ச ஒழிப்புத்துறை சம்மன்

சென்னை, ஜூலை.02-

சாலைப் பணிகள் முறைகேடு தொடர்பான ஊழல் வழக்கில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு விசாரணைக்கு நேரில் ஆஜராக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் சம்மன் அனுப்பியுள்ளனர்.

கடந்த திமுக ஆட்சியில் பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக இருந்த எ.வ.வேலு, சாலைப் பணிகளுக்கான ஒப்பந்தம் வழங்குவதில் ஊழல் செய்ததாக புகார் எழுப்பப்பட்டது. அறப்போர் இயக்க ஒருங்கிணைப்பாளர் ஜெயராம் வெங்கடேசன் அளித்த புகாரின் அடிப்படையில் தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை நடத்தினர்.

அதில் கடந்த 2022ஆம் ஆண்டு நெடுஞ்சாலை துறையின் சார்பில் சாலை அகலப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் குறுக்கு வடிகால் அமைப்புகளை சீரமைப்பு பணிகளுக்காக ரூபாய் 7 கோடி மதிப்பான ஒப்பந்தம், தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாகவும், ஆனால்



பணிகள் முழுமையாக மேற்கொள்ளப் படாத நிலையிலும் அதே ஆண்டு மார்ச் மாதம் 3.23 கோடி ரூபாய் அந்த ஒப்பந்த வருடத்திற்கு அரசு சார்பில் விடுவித்துள்ளதாகவும் கண்டறியப்பட்டது.

இது தொடர்பாக கடந்த ஆட்சியில் நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக இருந்த எ.வ.வேலு மற்றும் நெடுஞ்சாலை துறையைச் சேர்ந்த 9 அரசு அதிகாரிகள் மற்றும் ஒரு ஒப்பந்ததாரர் மீது குற்றவியல் சதி, மோசடி, அரசுப் பணம் கையாடல், போலி ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம் என பல்வேறு பிரிவுகளின் கீழ் லஞ்ச ஒழிப்பு துறை வழக்குப் பதிவு செய்தது.

அதன் தொடர்ச்சியாக கடந்த ஜூன் 25ஆம் தேதி முன்னாள் அமைச்சரும், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான எ.வ.வேலு வீடு, அவருக்கு தொடர்புடைய கல்வி நிறுவனங்கள், நெடுஞ்சாலை துறை அதிகாரிகளின் வீடுகள் மற்றும் ஒப்பந்ததாரரின் அலுவலகம் உள்ளிட்ட 20 இடங்களில் ஒரே நேரத்தில் லஞ்ச ஒழிப்பு துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில் இந்த வழக்கில் தொடர்புடைய பல்வேறு ஆவணங்கள், நிதி பரிவர்த்தனை பதிவுகள், மின்னனு ஆதாரங்கள் மற்றும் கணக்கில் வராத 40 லட்சம் ரூபாய் ரொக்கம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இருப்பினும், சோதனைக்கு பிறகு செய்தியாளர்களை சந்தித்த எ.வ.வேலு, தன்னிடமிருந்து முக்கிய ஆவணங்கள் அல்லது பணம் என எதுவும் கைப்பற்றப்படவில்லை என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்த வழக்கு தொடர்பாக முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு வரும் ஜூலை 3ஆம் தேதி நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க லஞ்ச ஒழிப்புத்துறை சம்மன் அனுப்பியுள்ளது.

## தீவிரவாதப் பட்டியலில் பாகிஸ்தானை சேர்க்க முயற்சி

புதுடெல்லி, ஜூலை.02-

பணமோசடி தடுப்பு மற்றும் தீவிரவாத நிதியுதவி தடுப்பு (ஏஎம்எல்/சிடிஎப்) அமைப்பு பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இயங்கி வருகிறது.

இந்த கண்காணிப்பு அமைப்பின் நிதி நடவடிக்கை பணிக்குழு (எப்ஏடிஎப்) கூட்டம் வரும் அக்டோபரில் நடைபெற உள்ளது. இதில், தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளை 'சாம்பல் பட்டியலில்' (Grey List) சேர்ப்பது மற்றும் ஏற்கெனவே இப்பட்டியலில் உள்ள நாடுகளை அவற்றின் செயல்பாட்டின் அடிப்படையில் விடுவிப்பது குறித்து முடிவு செய்யப்படும்.

தீவிரவாதத்தை ஊக்குவித்து வரும் பாகிஸ்தான் ஏற்கெனவே சாம்பல் பட்டியலில் இடம் பெற்றிருந்தது. எனினும், கடந்த 2022ம் ஆண்டு அக்டோபரில் பாகிஸ்தான் 'சாம்பல் பட்டியலில்' இருந்து நீக்கப்பட்டது.

இந்நிலையில், பாகிஸ்தானை மீண்டும் 'சாம்பல் பட்டியலில்' கொண்டுவர இந்தியா முயன்று வருகிறது.

இதன்படி, அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள எப்ஏடிஎப் கூட்டத்தில் தீவிரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரவளித்து வருவதற்கான வீடியோ மற்றும் இதர ஆதாரங்களை சமர்ப்பிக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

## எடப்பாடி பழனிசாமி சுயநலமாகச் செயல்படுவதாகக் கூறி, அ.தி.மு.க.,வில் இருந்து முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன் விலகல்

சென்னை, ஜூலை.02-

அதிமுகவின் தற்போதைய தலைமைப் பொறுப்பில் உள்ள எடப்பாடி பழனிசாமி சுயநலமாகச் செயல்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டி, அக்கட்சியின் முக்கிய நிர்வாகியும், முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.எம். ஆனந்தன் தனது கட்சிப் பொறுப்புகள் மற்றும் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாக அதிரடியாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் என்பது என்னுடைய வாழ்வில் நான் கண்ட எல்லா விதமான ஏற்றத்திற்கும் காரணமாக இருந்த இயக்கம். திருப்பூரில் எனக்கு அடையாளம் ஏற்படுத்தி தந்த இயக்கம் அதிமுக எனக்கு அடையாளத்தை ஏற்படுத்தி தந்தவர் இதய தெய்வம் புரட்சி தலைவி அம்மா. எளிய தொண்டனாக 1980ம் ஆண்டில் கழகத்தில் இணைந்த எனக்கு கிளை கழக செயலாளர், மாவட்ட பனியன் சங்க செயலாளர், மாவட்ட பேரவை இணை செயலாளர், நகர கழக செயலாளர், மாவட்ட கழக



செயலாளர் என கழகத்தில் அனைத்து உயரிய பொறுப்புகளையும்.

2011 ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராகவும் அதனை தொடர்ந்து அமைச்சராகவும் உயரிய பதவிகளை தந்து புரட்சி தலைவி அம்மா அவர்கள் அழகு பார்த்தார்.

2016ல் எனக்கு புரட்சி தலைவி அம்மா அவர்கள் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்காத போதும் மாவட்ட கழக செயலாளராக 4 தொகுதிகளிலும் வெற்றிக்கு பாடு பட்ட காரணத்தினால் உள்ளாட்சி தேர்தலில் மேயர் பொறுப்பிற்கு போட்டியிட வாய்ப்பு வழங்கினார்.

2016 தேர்தலுக்கு பின்பு 22 மாவட்ட கழக செயலாளர்களை புரட்சி தலைவி அம்மா அவர்கள் மாற்றிய போதும் என்னை மாற்றாததே புரட்சி தலைவி அம்மா அவர்கள் என் மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டாக இருந்ததை சுட்டி காட்ட கடமைபட்டுள்ளேன். அம்மாவின் மறைவிற்கு பிறகு மாவட்ட கழக செயலாளராக தலைமை அறிவுறுத்திய பணிகள் அனைத்தையும் செய்து வந்தேன்.

2020 ல் எந்த காரணமுமின்றி எனது மாவட்ட செயலாளர் பொறுப்பு எடுக்கப்பட்ட போதும் தலைமைக்கு விசுவாசமாக பணியாற்றி வந்தேன்.

2021 தேர்தலில் பல்லடம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு கழகத்தினரின் மேலான உழைப்பால் வெற்றி அடைந்தேன். தொடர்ந்து திருப்பூர் மாநகரில் கட்சி பலமிழந்து வருவதை பல முறை தலைமையிடம் சுட்டி காட்டியும் எந்த நடவடிக்கையும் எடுக்கபடாத நிலையே இருந்தது .

2026 தேர்தலில் போட்டியிட்ட போது தான், திருப்பூரின் கழகத்தின் உண்மை நிலை தெரிய வந்தது. தேர்தலில் வெற்றி தோல்வி சகஜம் என்றாலும் தோல்வி அடைந்த எங்களை போன்ற வேட்பாளர்களுக்கு தலைமை எந்த விதமான ஆறுதல் வார்த்தைகளோ, ஊக்கத்தையோ தரவில்லை. கண் முன்னே எங்களை வளர்த்த இயக்கம் கரைகின்றது அதனை தடுக்க தலைமையும் விரும்புவதில்லை.

என்றுமே தலைமையின் மீது சந்தேகம் வராத வரையில் தான், ஒரு இயக்கத்தில் தொண்டன் சிறப்பாக இயங்க முடியும், ஆனால் இன்றோ தலைமையே இயக்கத்தை பார்க்காமல் தங்களை மட்டுமே காத்து கொள்வதில் அக்கறை காட்டுகிறது.

எதிர்கருத்து சொல்பவர்களை எல்லாம் துரோகி பட்டம் சூட்டி வெளியே அனுப்ப தலைமையுடன் ஒரு சுயநல கூட்டம் இயங்கி கொண்டிருக்கின்றது. நான் என்றும் அதிமுகவை என்னுடைய உயிர்க்கும் மேலாக நேசிக்கின்றேன். ஆனால் தேனுடன் ஒரு துளி விஷத்தை சேர்த்தாலும் விஷம் தான் என்பது போன்று தலைமையின் விடாபடியான குணமும், சுயநல போக்கும் தொண்டர்களான தேனையும் விஷமாக்கிவிடும் என்பது தான் நிதர்சன உண்மை.


தண்டனைகளை தான் நான் தருவேன் என்று தலைமை சொன்னால், யார் தான் கருணையையும், மன்னிப்பை தருவார்கள்?? தன்னை இகழ்ந்தவர்களையும், தாழ்த்தியவர்களையும் ஏற்றத்தை தந்தவர் அம்மா. கூட அரவணைத்து இன்று அனைத்து கட்சிகளும் அதிமுகவினரை அரவணைக்க தயாராக இருக்கும் போது அதிமுகவின் தலைமை நீக்குவதில் தான் கவனம் செலுத்துகிறது.

நீண்ட யோசனைக்கு பிறகு அதிமுக எனும் மக்கள் தலைவர்கள் வளர்த்த இயக்கத்தில் இருந்து விடை பெறுகிறேன். இது வரை எனக்கு ஆதரவளித்து வந்த கழகத்தின் அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும், செயல் வீரர்களுக்கும், என்னுடைய நன்றிகளை உங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். அம்மா மறைந்தது முதலே தொடர்ந்து துரோகங்களையே நான் சந்தித்து வந்தவன் என்ற முறையில் எனக்கு துரோகி பட்டம் சூட்ட யாரும் முற்பட வேண்டாம் என குறிப்பிட்டுள்ளார்.

## அதிக கட்டணம் வசூலிக்கும் மருத்துவ கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

சென்னை, ஜூலை.02-

நான்கரை ஆண்டு எம்பிபிஎஸ் படிப்பிற்கு 5 ஆண்டு கட்டணம் வசூலிக்கும் கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவரது சமூக வலைதளத்தில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:



தமிழகத்தின் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் கல்விக் கட்டணம் வசூலிக்கப்படுவதாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் எழுந்து வருகின்றன. தேசிய மருத்துவ ஆணையம் (NMC) விதிமுறைப்படி கல்லூரிகள் 5 அல்லது 5.5 ஆண்டுகளுக்குக் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று NMC மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகள் திட்டவட்டமாகக் கூறியுள்ளன.

எம்.பி.பி.எஸ். (MBBS) படிப்பின் கல்விக்காலம் நான்கரை ஆண்டுகள் மட்டுமே. ஆனால், சில மருத்துவக் கல்லூரிகள் ஆண்டுகளுக்கான கல்விக் கட்டணத்தை வசூலிப்பதாக கூறப்படுகிறது. இது மாணவர்களுக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும் கூடுதல் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்துவதுடன், நியாயமான நடை முறையாகவும் தெரியவில்லை.

எனவே, விதிமுறைகளை மீறி கூடுதல் கட்டணம் அல்லது நான்கரை ஆண்டுகள் மட்டுமே கல்விக்காலம் இருந்தும் ஐந்து ஆண்டுகளுக்கான கட்டணத்தை வசூலிக்கும் மருத்துவக் கல்லூரிகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மருத்துவக் கல்வித் துறை மற்றும் அதனைச் சார்ந்த அமைச்சர் இந்த விவகாரத்தை நேரடியாகக் கண்காணித்து, இனி இதுபோன்ற தவறுகள் எந்த மருத்துவக் கல்லூரியிலும் நடைபெறாத வகையில் கடுமையான கண்காணிப்பு மற்றும் நடவடிக்கைகளை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஜூலை.2-

தேனி மாவட்ட காவல்துறையினர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் இரவு நேரங்களில் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரத்தில் மாபெரும் இரத்ததான முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது

தாம்பரம், ஜூலை.2-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் செங்கல்பட்டு வடமேற்கு மாவட்டச் கழக செயலாளர் டி.சரத்குமார் அவர்களின் தலைமையில் தமிழக வெற்றிக் கழக மருத்துவ அணி செங்கல்பட்டு வடமேற்கு மாவட்டம் சார்பில் மேற்கு தாம்பரம், ரங்கநாதபுரம் அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாபெரும் தன்னார்வ இரத்ததான முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியை மாவட்ட மருத்துவ அணி டாக்டர் நா.ஷாஜகான் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். இந்த முகாமை மாவட்ட கழக பொருளாளர் இராஜேந்திரன், மாவட்ட கழக இணை செயலாளர் விஜய் தியாகு, மாவட்ட மருத்துவ அணி தலைமை டாக்டர் சரவணன், தாம்பரம் மத்திய பகுதி துணைங செயலாளர் ஜோஷ்வா சுந்தர் ஆகியோர் தலைமை வகித்தனர். மற்றும் மருத்துவர்கள், கழக நிர்வாகிகள், தன்னார்வலர்கள், பொதுமக்கள் மற்றும் தமிழக வெற்றிக் கழக உறுப்பினர்கள் ஆர்வமுடன் பங்கேற்று இரத்ததானம் செய்தனர்.

மேலும், 50க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களுக்கு அத்தியாவசிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு அவர்களின் சேவை பாராட்டப்பட்டது. சமூகத்தின் முன்னேற்றத்திற்காக அமைதியாக உழைக்கும் தூய்மைப் பணியாளர்களை கௌரவிக்கும் விதமாக இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இரத்ததானம் என்பது உயிர் காக்கும் உயரிய சமூகப் பணி என்பதையும், தன்னார்வ இரத்ததானத்தின் அவசியத்தை பொதுமக்களிடம் எடுத்துரைப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்த ஒத்துழைப்பு வழங்கிய அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள், மருத்துவ அணி உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், தன்னார்வலர்கள் மற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் தமிழக வெற்றிக் கழக மருத்துவ அணி தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்



# பல்லாவரத்தில் தமுமுக சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

பல்லாவரம், ஜூலை.2-

செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் பல்லாவரத்தில் இஸ்லாத்தை தழுவிய பிற்படுத்தப்படோருக்கான இடஒதுக்கீட்டை மறுக்கும் நீதிபதி ஜிஆர்சுவாமிநாதனின் தீர்ப்பைக் கண்டித்து செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் பல்லாவரத்தில் தமுமுக சார்பாக மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் எஸ்.கே.ஜாஹிர் உசேன் அவர்கள் தலைமையில் நடைபெற்றதுசிறப்பு அழைப்பாளராக மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொதுச் செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப் அவர்கள் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் காஞ்சி மாவட்ட தலைவர் ஜே.சலிம் கான், மனிதநேய மக்கள் கட்சி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் எம்.அப்துல் ரஹீம், மாவட்ட பொருளாளர் எம்.சபியுல்லா, மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் எம்.முஜிபுர் ரஹ்மான், மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ஜிந்தா மதார்,மக்கள் உரிமை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அணி மாநில துணை செயலாளர் எஸ்.முகமது நயினார், மாவட்டத் துணைத் தலைவர் ஏ.என்.அப்துல் ரகுமான், மு.மாவட்ட செயலாளர் இப்பாஹிம்,

சமூகநீதி மாணவர் இயக்கத்தின் தலைமை பிரதிநிதி ஜெய்னுல் ஆபுதீன், மாவட்ட துணைச் செயலாளர் அப்துல் காதர், பி.சாகுல் ஹமீது, கபீர் கான், ஜமால் மற்றும் மாவட்ட, பகுதி, ஒன்றிய, நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# நீலகிரி மாவட்ட சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மாணவர்கள் மற்றும் ஆசிரியர் மத்தியில் விழிப்புணர்வு கூட்டம்

நீலகிரி, ஜூலை.2-

நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆணைக்கிணங்க, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் உதகை நகர் உட்கோட்டம், நகர் மேற்கு காவல் நிலைய எல்லைக்ககுட்பட்ட St. Hildas ஜூனியர் காலேஜில் படிக்கும் மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில்

விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. இக் கூட்டத்தில் SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டம், POCSO சட்டம், Cyber crime,தீண்டாமை ஒழிப்பு குறித்து எடுத்து கூறப்பட்டது. மேலும் சமூக நீதி மற்றும் போதை ஒழிப்பு குறித்தான





உறுதிமொழி ஏற்கப்பட்டது மேலும் SC/ST மக்களுக்கான அரசின் நல திட்டங்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கான அரசின் கல்வி சலுகைகள் பற்றிய நோட்டீஸ் விநியோகிக்கப்பட்டது .



# பகுஜன் பிரேம் தாயார் படதிறப்பு நினைவேந்தல் நிகழ்ச்சி

திருவள்ளூர், ஜூலை.2-

திருவள்ளூர் மாவட்டம் கீழானூர் கிராமத்தில் தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில செயலாளர் பகுஜன் எம்.பிரேம் தாயார் எம்.சுகுணாவின் 16ம் நாள் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றதுஇந்த நிகழ்ச்சி பௌத்த முறைப்படி பஞ் சஸ்கந்த நினைவேந்தல் கூட்டத்துடன் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் கலந்துகொண்டு பின்னர் மேடையில் அலங்கரிக்கப்பட்ட எம்.சுகுணாவின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து மலர் தூவி நினைவஞ்சலி அஞ்சலி செலுத்தினார் இந்த நிகழ்வின் போது பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் பிரகாசம் (எ) குட்டி, மற்றும் தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் திருத்தணி டி.மைக்கேல்தாஸ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு மாலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினார்கள்

# வணிக பயன்பாட்டுக்கான எல்பிஜி சிலிண்டர் விலை ரூ.172 குறைவு

புதுடெல்லி, ஜூலை.2-

வணிகப் பயன்பாட்டுக்கான எல்பிஜி சிலிண்டர்களின் விலையை எண்ணெய் நிறுவனங்கள் குறைத்துள்ளன. இன்று வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பின்படி, சென்னையில் வணிக சிலிண்டரின் விலை ரூ.172.50 குறைக்கப்பட்டுள்ளது. இந்த விலை மாற்றம் இன்று (ஜூலை 1) முதல் நாடு முழுவதும் அமலுக்கு வந்துள்ளது.இந்த விலைக்குறைப்புக்குப் பிறகு, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக சிலிண்டரின் விலை ரூ.3,106 ஆகக் குறைந்துள்ளது. எனினும், வீட்டு உபயோகத்திற்கான 14.2 கிலோ எல்பிஜி சிலிண்டர் நுகர்வோருக்கு இந்த முறை எந்தவித விலைக் குறைப்பும் அறிவிக்கப்படவில்லை. வீட்டு உபயோக சிலிண்டரின் விலை எவ்வித மாற்றமுமின்றி ரூ.957.50 என்ற அளவிலேயே நீடிக்கிறது.இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து, உலகளவில் கடுமையான எரிசக்தி தட்டுப்பாடு ஏற்பட்டது. அதன் எதிர்வினையாக, உலக கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுப் போக்குவரத்தின் முக்கியப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து கப்பல் போக்குவரத்தை முடக்கியது. இதன் காரணமாக சர்வதேச சந்தையில் எரிபொருட்களின் விலை கடுமையாக உயர்ந்தது.இந்த தடையைச் சுட்டிக்காட்டி, இந்திய எண்ணெய் நிறுவனங்கள் கடந்த நான்கு மாதங்களில் மட்டும் வணிக சிலிண்டரின் விலையை நான்கு தவணைகளாக உயர்த்தின. அதேபோல், வீட்டு உபயோக சிலிண்டரின் விலையும் மார்ச் மற்றும் ஜூன் மாதங்களில் உயர்த்தப்பட்டது. தற்போது ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து ஓரளவுக்கு சீராக தொடங்கியுள்ள சூழலில், வணிக சிலிண்டரின் விலையை எண்ணெய் நிறுவனங்கள் முதன்முறையாகக் குறைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.



■ சென்னை குயப்பேட்டை சச்சிதானந்தம் தெருவில் அமைந்துள்ள, அருள்மிகு ஸ்ரீ பவானி அம்மன் திருக்கோயில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா 02.07.2026 அன்று காலை 9 மணிக்கு மேல் 9.30 குள் நடைபெற உள்ளதால் பொதுமக்கள் அனைவரையும் ஆலயம் சார்பில் தமிழக வெற்றி கழகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.சாரதிவாசன் மற்றும் ஆலய விழா குழுவினர் அன்புடன் வரவேற்கின்றனர்.

# ஸ்ரீ மங்களகர ஆஞ்சநேயர் சுவாமி கும்பாபிஷேகம்

பெரியகுளம், ஜூலை.2-

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள தாமரைகுளம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மங்களகர ஆஞ்சநேயர் சுவாமி நாளைய உணருத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது இந்த கும்பாபிஷே நிகழ்ச்சி 19 6 2026ல் முகூர்த்தக்கால் நடுதல் கங்கணம் நிகழ்ச்சியுடன் தொடங்கி 28 6 20026 அன்று விக்னேஸ்வர பூஜை எஜமானர் அணுக்கை மகா சங்கல்பம் புண்யக வஸ்திர பகுதி மகா கணபதி ஹோமம் சுதர்சன ஹோமம் மகாலட்சுமி கோமம் நவக்கிரக ஹோமம் மகா பூர்ணகுதி தீபாராதனை பிரசாதம் வழங்குதல் செய்யும் மாலை முதல் கால யாக பூஜை அறை பூஜை மங்கள இசை விக்னேஸ்வர பூஜை தீர்த்தங்கரணம் வாஸ்து சாந்தி ஆஞ்சநேய மூல மந்திரி ஜெபகோமம் திரவிய யாகூபதி பூர்ணாகுதி மகா திவாரணி பிரசாதம் வழங்குதல் நிகழ்ச்சியும் பந்தர ஸ்தாபனம் ரத்தின நியாசம் அஞ்சன சங்கடம் சாத்துதல் நிகழ்ச்சி நடைபெற்றது விமான மகா கும்பாபிஷேகம் மூலஸ்தான மகா கும்பாபிஷேகம் மகா



அபிஷேகம் அலங்காரதி பரதனை நடைபெற்றது மேலும் காலை 11 மணிக்கு மேல் அன்னதானம் வீழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது நிகழ்ச்சியில் அனைத்து பக்த கோடிகள் கலந்து கொண்டு சிறப்பாக நிகழ்ச்சி என்னை நடத்திக் கொடுத்தனர் சர்வ சாதகத்தின் பெரியகுளம் பாம்பாற்று ராம பக்த ஆஞ்சநேயர் திருக்கோயில் பரம்பரை ஸ்தானிகர் எஸ் லட்சுமணன் ஐயர் அவர்கள் தலைமையில் தியாக பூஜை நடத்தி கொடுக்கப்பட்டது ஸ்ரீ மங்களகர ஆஞ்சநேயர் திருக்கோயில் பங்காளிகள் மற்றும் தாமரைக்குளம் ஊர் பொதுமக்கள் மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்

# நீலகிரி மாவட்ட தொழில் மையம் மூலம் கைவினை கலைகள் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மானியம் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவிப்பு

நீலகிரி, ஜூலை.2-

நீலகிரி மாவட்டத்தில் கைவினைக் கலைகள் மற்றும் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சுய வேலை வாய்ப்பை உருவாக்கும் பொருட்டு கலைஞர் கைவினைத் திட்டம்” மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் ரூ.3.00 இலட்சம் வரை பிணையற்ற கடனுதவி மற்றும் ரூ.50,000/வரை மானியம் பெறலாம். 5% வரை வட்டி மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் தொழில் முனைவோர்களுக்கு திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் விண்ணபிக்க 35 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். எந்த வகுப்பினராகவும் இருக்கலாம். இத்திட்டத்தின்கீழ் தையல் வேலை, கட்டிட வேலைகள், மரவேலைப்பாடுகள், பாரம்பரிய முறையில் ஜவுளி அச்சிடுதல். தோல் கைவினைப் பொருட்கள், காலணிகள் தயாரித்தல். மீன் வலை தயாரித்தல், நகை செய்தல், சிகையலங்காரம், அழகுக்கலை, துணி நெய்தல், துணிகளில் கலைவேலைப்பாடுகள், சுதை வேலைப்பாடுகள், பூட்டு தயாரித்தல், கூடை முடைதல், கயிறு பாய் பின்னுதல், துடைப்பான் செய்தல், மண்பாண்டங்கள். சுடுமண் வேலைகள், பொம்மைகள் தயாரித்தல், படகுக் கட்டுமானம், துணி வெளுத்தல், துணி தேய்த்தல், சிற்ப வேலைப்பாடுகள், கற்சிலை வடித்தல். ஓவியம் வரைதல், வண்ணம் பூசுதல், பழங்குடியினரின் இயற்கை சேகரிப்புகள், கண்ணாடி வேலைப்பாடுகள், பாரம்பரிய இசைக் கருவிகள் தயாரித்தல், மலர் வேலைப்பாடுகள், உலோக வேலைப்பாடுகள், பாசிமணி வேலைப்பாடுகள், கைவினைப் பொருட்கள், மூங்கில், பிரம்பு. சணல், பனை வேலைப்பாடுகள் போன்ற தொழில்கள் துவங்க விண்ணப்பிக்கலாம்.

11:122024 அன்று தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் இதுவரை 229 பயனாளிகளுக்கு மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

சுய தொழில் துவங்க நீலகிரி தற்போது, 2026 2027ஆம் நிதியாண்டில் மாவட்டத்திற்கு கலைஞர் கைவினைத் திட்டத்தின்கீழ் ரூ. 111.96 இலட்சம் மானிய உதவியுடன் கடன் வழங்க 287 தொழில் திட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இலக்குwww.msmeonline.tn.gov.in/kkt σтоότη இணையதள முகவரியில் தொழில் முனைவோர் விண்ணப்பித்து பயன்பெறலாம். மேலும், விவரங்கள் பெறவும். கூடுதல் வழிகாட்டுதலுக்கும், 04232443947, 8925533995, 8925533997 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம். ஆகவே, தகுதியும் மற்றும் ஆர்வமும் உள்ள பொதுமக்கள் இத்திட்டத்தின் மூலம் புதிய தொழில் துவங்கவும் மற்றும் தொழிலை மேம்படுத்தவும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு. அழைப்பு விடுத்துள்ளார்கள்.

# அமைச்சர்கள் தொடர்பான சர்ச்சைகள்; தவெக அரசில் பரபரப்பு



ஜூலை.2-
தமிழக வெற்றிக் கழகம் தலைமையிலான அரசில், இரண்டு அமைச்சர்கள் தொடர்பான சர்ச்சைகள் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் கில்லி சரத் தொடர்பான பழைய வீடியோ சமூக வலைதளங்களில் மீண்டும் வைரலானதைத் தொடர்ந்து, அவர் மீது போதைப்பொருள் பயன்படுத்தியதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதற்கு விளக்கம் அளித்த அவர், அது பாராசிட்டமால் மாத்திரை என்றும், தவறான தகவல்கள் பரப்பப்படுவதாகவும் தெரிவித்தார். இதற்கிடையில், அமைச்சர் விஜய் பாலாஜியின் பேச்சும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து, இரு விவகாரங்களிலும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் கட்சித் தலைமையினர் விளக்கம் கேட்டுள்ளதாகவும், அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆலோசனை நடைபெற்று வருவதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மானாமதுரை சம்பவத்தில் உயிரிழப்பு: வாலிபர் ஆகாஷ் அஸ்தி பெற்றோரிடம் ஒப்படைப்பு





மதுரை, ஜூலை.2-
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கிருஷ்ணராஜபுரம் காலனியைச் சேர்ந்தவர், ராஜேஷ்கண்ணன். இவருடைய மகன் ஆகாஷ் (வயது 26). கடந்த மார்ச் 8ந் தேதி அவரை ஒரு வழக்கு தொடர்பாக போலீசார் அழைத்துச் சென்று தாக்கியதில் அவர் உயிரிழந்தார்.

இது தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு 6 போலீசார் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இந்த நிலையில் ஆகாஷ் உடல் மதுரை அரசு ஆஸ்பத்திரியில் 100 நாட்களுக்கும் மேலாக வைக்கப்பட்டிருந்தது. பின்னர் ஐகோர்ட்டு உத்தரவின்படி அவரது உடலானது மதுரை கோட்டாட்சியர் கருணாகரன் முன்னிலையில் தத்தனேரி மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

அஸ்தியைப் பெற மனுஇந்த நிலையில் ஆகாஷ் அஸ்தியைப் பெறுவதற்காக அவரது பெற்றோர் ராஜேஷ்கண்ணன், ஆனந்தி மற்றும் ஆகாஷ் கொலைக்கு எதிரான கூட்டமைப்பினர் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்தனர். பின்னர் அவர்கள் கோட்டாட்சியர் கருணாகரனிடம், ஆகாஷ் அஸ்தியைத் தருமாறும், ஆகாஷ் இறப்புக்கு காரணமானவர்களைக் கைது செய்யுமாறும் மனு கொடுத்தனர்.

அந்த மனுவைப் பெற்றுக்கொண்ட கோட்டாட்சியர், அஸ்தியை ஒப்படைக்க அனுமதி கடிதம் கொடுத்தார். அதைத் தொடர்ந்து மின்மயானத்தில் அந்த உத்தரவைக் காண்பித்து ஆகாஷ் அஸ்தியைப் பெற்றோர் பெற்றுக்கொண்டனர்.

இது குறித்து லெனின் கூறுஇது குறித்து அவர்களது தரப்பு லெனின் கூறும்போது: "ஆகாஷ் உடலை அடக்கம் செய்ய வேண்டும் என ஐகோர்ட்டு கூறிய நிலையில் தத்தனேரி மின் மயானத்தில் ஆகாஷ் உடலை எரித்துள்ளனர். இந்த வழக்கில் தொடர்புடைய போலீசாரைக் காப்பாற்ற தடயங்களை அழித்துள்ளனர். இது சட்டவிரோதம். காவல்துறையின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடுபவர்களை ஒடுக்குகிறார்கள். இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி உத்தரவிட வேண்டும். மது விற்பனைக்கு எதிராகப் போராடிய வாலிபரைக் கொலை செய்துவிட்டு, குற்றவாளிகளைக் காவல்துறையினர் பாதுகாக்கின்றனர் என்றார்.




# கிருஷ்ணகிரியில்ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனதுணை முதல்வருக்கு பணி நிறைவு பாராட்டு விழா

கிருஷ்ணகிரி, ஜூலை.2-
கிருஷ்ணகிரியில் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறவன துணை முதல்வருக்கு பணி நிறைவு பாராட்டு விழா நடந்தது.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பணியாற்றி வந்த துணை முதல்வர் அன்புமணிக்கு, நேற்று பணி நிறைவு பாராட்டு விழா நடந்தது. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் ஹேமலதா தலைமை வகித்தார். பணி நிறைவு பெற்ற துணை முதல்வர் அன்புமணி கடந்த 1992ம் ஆண்டு முதல் 2 ஆண்டுகள் ஆசிரியராகவும், 8 ஆண்டுகள் முதுகலை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். பின்னர் கிருஷ்ணகிரி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 12 ஆண்டுகள் விரிவுரையாளராகவும், 9 ஆண்டுகள் முதுநிலை விரிவுரையாளராகவும் பணியாற்றிய நிலையில் கடந்த 4 ஆண்டுகளாக துணை முதல்வராக பணியாற்றி நேற்றுடன் ஓய்வு பெற்றார்.

கல்வி ஆராய்ச்சியில் அதிக கவனமும், ஈடுபாடும் கொண்டவராக இவர் பணியாற்றியதால் இவரை பாராட்டி தமிழக அரசு விருது வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமின்றி கொரோனா கால கட்டத்தில், 400 தலைமை ஆசிரியர்களுக்கு சுயமாக இலவச பரிசோதனை முகாமையும் நடத்தியுள்ளார். பணி ஓய்வு பெற்ற இவரை கல்வியாளர்கள், அரசு ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் பலரும், சால்வை மற்றும் மாலை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி பாராட்டி பேசினர்.

# அவதூறு வழக்கு: திமுக எம்எல்ஏ அனிதா ராதாகிருஷ்ணன் முன்ஜாமீன் கோரி மனு



சென்னை, ஜூலை.2-
முதல்வர் விஜய் குறித்து ஒருமையிலும், அவதூறாகவும் பேசியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் திருச்செந்தூர் தொகுதி திமுக எம்எல்ஏ அனிதா ராதாகிருஷ்ணன், முன்ஜாமீன் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

திருச்செந்தூர் அருகே ஆத்தூர் பகுதியில் ஜூன் 20ம் தேதி முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, திமுக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு பேசிய, திருச்செந்தூர் தொகுதி திமுக எம்எல்ஏ அனிதா ராதாகிருஷ்ணன், முதல்வர் விஜய் குறித்து ஒருமையிலும், அவதூறாக வும் பேசியதாக, தவெக நகரச் செயலாளர் செல்வம் என்பவர் ஆத்தூர் காவல் நிலையத்தில் புகாரளித்தார். அதனடிப்படையில், அனிதா ராதாகிருஷ்ணன் மீது ஆத்தூர் போலீசார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதனிடையே, இந்த வழக்கில் முன் ஜாமீன் கோரி, அனிதா ராதாகிருஷ்ணன், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அதில், ஆளுங்கட்சியின் நடவடிக்கைகள் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பு குறித்து பிரதான எதிர்க்கட்சி எம்எல்ஏ என்ற முறையில் பேசியதாகவும், அரசியல் உள் நோக்கத்துடன் தனக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மனுவில் கூறியுள்ளார்.

இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# கோவையில் வீடு புகுந்து கல்லூரி மாணவியின் தந்தை மீது இளைஞர்கள் தாக்குதல்

கோவை, ஜூலை.2-
வடுக்கப்பாறையில் வீடு புகுந்து கல்லூரி மாணவியின் தந்தையை இளைஞர்கள் தாக்கியுள்ளனர். கல்லூரியில் படித்து வரும் சிவக்குமார் என்பவரின் மகளின் அடையாள அட்டையை பறித்து சிலர் தாக்கியுள்ளனர். தனது மகள் தாக்கப்பட்டதை தட்டிக் கேட்ட தந்தை சிவக்குமாரின் வீடு புகுந்து இளைஞர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். சூர்யா என்ற இளைஞர் தனது நண்பர்களுடன் சேர்ந்து, மாணவியின் வீடு புகுந்து பொருட்களை சூறையாடினார்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில்22 தபால் நிலையங்களிலும் ஆதார் பதிவு, திருத்தம் வசதி

கிருஷ்ணகிரி, ஜூலை.2-
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 22 தபால் நிலையங்களில் ஆதார் பதிவு மற்றும் திருத்த சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.இது குறித்து கிருஷ்ணகிரி அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் பார்த்தீபன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி அஞ்சல் கோட்டத்தில் கிருஷ்ணகிரி தலைமை தபால் நிலையம், கிருஷ்ணகிரி தொழிற்பேட்டை தபால் நிலையம், பர்கூர், மத்தூர், ஊத்தங்கரை, சிங்காரப்பேட்டை, காவேரிப்பட்டிணம், காரிமங்கலம், போச்சம்பள்ளி, நாகரசம்பட்டி, கல்லாவி, எலத்தகிரி, வேப்பனஹள்ளி, வரட்டனப்பள்ளி, சூளகிரி, ராயக்கோட்டை, ஒசூர், ஒசூர் சிப்காட், மத்திகிரி கால்நடைப்பண்ணை, தளி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட 22 தபால் நிலையங்களில் ஆதார் பதிவு மற்றும் திருத்த சேவைகள் வழங்கப்படுகிறது.

இங்கு பொதுமக்கள் ஆதார் அட்டைக்கான புதிய பதிவை கட்டணமின்றி தபால் நிலையங்களில் செய்துக் கொள்ளலாம். ஆதார் அட்டையில் உள்ள விவரங்களில் பெயர், முகவரி உள்ளிட்டவை திருத்தம் செய்ய ரூ.75 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. புகைப்படம், கைரேகை உள்ளிட்ட விவரங்களை புதுப்பிக்க ரூ.125 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. எனவே, பொதுமக்கள் இச்சேவைகளை பயன்படுத்தி ஆதார் பதிவு மற்றும் திருத்தங்களை அனைத்து வேலை நாட்களிலும் எளிதாக செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

# 'பராசக்தி' பட சம்பளப் பாக்கி: இயக்குநர் சுதா கொங்கரா வழக்கு



சென்னை, ஜூலை.2-
பராசக்தி படத்தை இயக்கிய வகையில் தனக்கு வழங்க வேண்டிய சம்பள பாக்கி ரூ. 8.39 கோடியை வழங்கக்கோரி இயக்குநர் சுதா கொங்கரா தொடர்ந்துள்ள வழக்கில், படத்தயாரிப்பு நிறுவனம் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிவகார்த்திகேயன், ஸ்ரீலீலா, அதர்வா, ரவி மோகன் நடித்துக் கடந்த ஜனவரி மாதம் வெளியான திரைப்படம், 'பராசக்தி'. ஆகாஷ் பாஸ்கரனின் டான் பிக்சர்ஸ் தயாரித்த இப் படத்தைச் சுதா கொங்கரா இயக்கினார். அவருக்கு ரூ.15 கோடி சம்பளம் பேசப்பட்டு ஒப்பந்தம் செய்த நிலையில் ரூ.8.39 கோடியை வழங்காமல் பாக்கி வைத்துள்ளதாகவும், எனவே அந்த தொகையை வழங்குமாறு படத்தயாரிப்பு நிறுவனத்துக்கு உத்தரவிடக் கோரி, சுதா கொங்கரா சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்மேலும் அந்த மனுவில், "தனக்கான சம்பளப் பாக்கியை வழங்காமல், டான் பிக்சர்ஸ் தயாரிப்பில் அதர்வா நடித்துள்ள 'இதயம் முரளி' படத்தை வெளியிடத் தடை விதிக்க வேண்டும். 'பராசக்தி' படத்தின் மூன்றாம் நபருக்கான உரிமையை வழங்கவும் தடை விதிக்க வேண்டும். 'பராசக்தி' படத்தை ஓடிடி மூலமாக வெளியிட்டதன் மூலம் கிடைத்த வருமானத்தின் முழு விவரங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவிட வேண்டும்" எனக் கோரியிருந்தார்.இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கே.குமரேஷ் பாபு, இது தொடர்பாக படத்தயாரிப்பு நிறுவனம் ஜூலை 8க்குள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையைத் தள்ளி வைத்துள்ளார்.

# கிருஷ்ணகிரியில் ஜமாபந்தி நிறைவுதீர்வு காணப்பட்டோருக்கு ஆணைகள் வழங்கல்

கிருஷ்ணகிரி, ஜூலை.2-
கிருஷ்ணகிரி தாலுகா அலுவலகத்தில் நேற்று 82 வருவாய் கிராமங்களுக்கான ஜமாபந்தி முடிந்து, தீர்வு காணப்பட்டோருக்கான ஆணைகள் வழங்கப்பட்டது. கிருஷ்ணகிரி தாலுகா அலுவலகத்தில், கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், பெரியமுத்தூர், ஆலப்பட்டி, வேப்பனஹள்ளி, குருபரப்பள்ளி ஆகிய, 6 உள்வட்டங்களை சேர்ந்த, 82 வருவாய் கிராமங்களுக்கு கடந்த 12ம் தேதி ஜமாபந்தி துவங்கியது. நேற்று வரை இடைப்பட்ட 9 நாட்களில் நடந்த ஜமாபந்தியில் பல்வேறு பகுதிகளை சேர்ந்த மக்கள் மனுக்களை அளித்தனர். நேற்று நடந்த ஜமாபந்தி நிறைவு விழாவில் மாவட்ட கலெக்டரின் கூடுதல் நேர்முக உதவியாளர் தர்மராஜ் தலைமை வகித்தார். கிருஷ்ணகிரி தாசில்தார் முன்னிலை வகித்தார்.நிறைவு விழாவில் தீர்வு காணப்பட்டோருக்கு ஆணைகளை வழங்கிய மாவட்ட கலெக்டின் நேர்முக உதவியாளர் தர்மராஜ் பேசியதாவது: கிருஷ்ணகிரி சுற்றுப்பகுதி கிராமங்களில் இருந்து ஜமாபந்தியில் பட்டா மாற்றம், உட்பிரிவு, பட்டா ரத்து, பெயர்மாற்றம், ஆக்கிரமிப்பு அகற்றல், இலவச வீட்டுமனை, உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, 978 மனுக்கள் பெறப்பட்டது. இதில், தகுதிவாய்ந்த, 106 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, இன்றே ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ளோர் மனுக்கள் மீதும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்படும்.இவ்வாறு அவர் பேசினார்.இந்நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி தனி தாசில்தார்கள் கோகுல்நாத், மகேஸ்வரி, துணை தாசில்தார்கள், ஆர்.ஐ., வி.ஏ.ஓ.,க்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில் 3 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

சென்னை, ஜூலை.2-
நீலகிரி, தேனி, கோவை மாவட்டங்களில் நாளை (ஜூலை 2) கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நீலகிரி, கோவை, கன்னியாகுமரி மாவட்டங்களில் நாளை மறுநாள் கனமழை பெய்யக்கூடும் என்றும் கூறியுள்ளது.சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை மற்றும் இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை மையம் தெரிவித்துள்ளது. சென்னையில் அதிகபட்ச வெப்பநிலை 37 செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 2829 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். தென் தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.தென்மேற்கு வங்கக்கடலின் சில பகுதிகள், ஆந்திர கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# தேனி மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், வடபுதுப்பட்டி ஊராட்சி பின்னத்தேவன்பட்டியில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் தேசிய கால்நடை நோய்த்தடுப்புத் திட்டத்தின் கீழ் 9ஆவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது



தேனி, ஜூலை.2-
இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார் அவர்கள் மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் க.சபரி ஐங்கரன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு, தடுப்பூசி முகாமினை தொடங்கி வைத்தார்கள்.

கால்நடைகளை தாக்கும் முக்கிய நோய்களில் ஒன்று கால் மற்றும் வாய் நோய் என்கிற கோமாரி நோய். இந்நோய் மிக கொடிய வைரஸ் கிருமிகளால் பரவுகிறது. எனவே, தேனி மாவட்டத்தில் உள்ள பசு மற்றும் எருமை இனங்களை கோமாரி நோயிலிருந்து காக்கும் வண்ணம் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் தேசிய கால்நடை நோய்த்தடுப்புத் திட்டத்தின் கீழ் கால் மற்றும் வாய் தடுப்பூசித் திட்ட 9ஆவது சுற்றின் கீழ் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் இன்று (01.07.2026) முதல் 31.07.2026 வரை 31 நாட்களுக்கு 54 மருத்துவ குழுக்கள் மூலம் மாவட்டத்தில் உள்ள சுமார் 1,02,450 கால்நடைகளுக்கு தடுப்பூசிப்பணி இலவசமாக மேற்கொள்ளப்பட உள்ளது. பாரத் பசுதன் செயலியில் கால்நடை குறித்த தரவுகளை பதிவேற்றம் செய்யவும், தடுப்பூசி போடப்பட்டதை உறுதிசெய்யவும், தங்களது கைபேசி எண்ணிற்கு வரும் ளிஜிறி (கடவுச்சொல்)யை தடுப்பூசி குழுவினரிடம் தெரிவிக்க வேண்டும். இதன் மூலம் கால்நடைகளுக்கான வருங்கால நலத்திட்ட உதவிகளுக்கும் அரசின் சலுகைகளை நேரடியாக பெறுவதற்கும், கால்நடைகளுக்கு மானிய விலையில் காப்பீட்டுத்திட்டம் கிடைப்பதற்கும், தடுப்பூசி மற்றும் மருத்துவ சேவைகளை விரைந்து பெறுவதற்கும் கால்நடைகளின் ஆரோக்கியத்தை கண்காணிப்பதற்கும் பெரிதும் உதவியாக இருக்கும். மேலும், கால்நடை வளர்ப்போர் தங்கள் கிராமத்திற்கு தடுப்பூசி குழுவினர் வரும்பொழுது 4 மாதம் வயதுள்ள கன்று முதல் சினை, கறவை மாடுகள் உள்ளிட்ட தங்களின் அனைத்து மாடுகளுக்கும் கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி(கோமாரி) போட்டுக்கொண்டு தங்கள் கால்நடைகளுக்கு இக்கொடிய நோய் வராமல் பாதுகாக்க வேண்டும். எனவே, கால்நடைவளர்ப்போர் இம்முகாமினை தவறாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மண்டல இணை இயக்குநர் மரு.கிரிஜா, துணை இயக்குநர் மரு.சுகுமார், உதவி இயக்குநர்கள் மரு.பாஸ்கரன், மரு.சுஸ்வரன், மரு.சிவரத்னா, கால்நடை மருத்துவர் மரு.செந்தில் ராஜகுரு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# காளையார்கோவில் அருகே 10க்கும் மேற்பட்ட பனைமரங்கள் வேருடன் சாய்ப்பு; நடவடிக்கை கோரி கோரிக்கை






சிவகங்கை, ஜூலை.2-
சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வட்டம், கொடிக்காடு கடம்பூரணி குருப்பிற்கு உட்பட்ட புல எண் 38 பகுதியில் 10க்கும் மேற்பட்ட பனைமரங்கள் ஜேசிபி இயந்திரம் மூலம் வேருடன் சாய்க்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுதொடர்பாக, பனைமரங்களை அகற்ற பயன்படுத்தப்பட்ட ஜேசிபி இயந்திரத்தை பறிமுதல் செய்து, சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.மேலும், மாநில மரமாக அறிவிக்கப்பட்ட பனைமரங்களை அழித்தவர்கள் மீது மாவட்ட நிர்வாகம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மக்கள் தொகை கணக்கெடுப்பு2027 தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது





தேனி, ஜூலை.2-
மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2027 Phase-I வருகின்ற 01.08.2026 முதல் 30.08.2026 வரை நடைபெற உள்ளது. அதற்கு முன்பாக 16.07.2026 முதல் 31.07.2026 வரை சுயக்கணக்கெடுப்பு (Self Enumeration) https://Se.census.gov.in என்ற இணையதளம் மூலம் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் தனது சுயவிபரத்தினை பதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக தேனி மாவட்டத்தில் ஊரகம், நகரப்பகுதிகளுக்கு 33 பொறுப்பு அலுவலர்களும் (Charge Officers), 39 களப்பயிற்றுனர்களும் (Field Trainers), 35 தொழில்நுட்ப உதவியாளர்களும் (Technical Assistant), 1 பல்நோக்கு பணியாளரும் (Multitask Staff), 1959 கணக்கெடுப்பாளர்களும் (Enumerators), 312 மேற்பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 16.07.2026க்கு முன்பாகவே அனைத்து கணக்கெடுப்பாளர்கள் (Enumerators) மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு (Supervisors) களப்பயிற்றுநர்கள் மூலம் ஒரு குழுவிற்கு 50 பேர் வீதம் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.மக்கள் தொகை கணக் கெடுப்பு தொடர்பாக ஒவ்வொறு பொறுப்பு அலுவலகத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ள கணக்கெடுப்பாளர் (Enumerators), மேற்பார்வையாளர் (Supervisors) எண்ணிக்கை தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், ஒவ்வொரு பொறுப்பு அலுவலகத்திற்கும் புதிய வங்கிக் கணக்கு தொடங்கப்பட்ட விபரம், கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு அளிக்க வேண்டிய பயிற்சிக்குரிய நாள், பயிற்சி இடம் தொடர்பாக விரைவாக முடிவு செய்யுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .இராமகிருஷ்ணன் மற்றும் மாவட்ட பொறுப்பு அலுவலர்கள், அலுவலகப் பணியாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# வடகரை அரசு ஆதிதிராவிட நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழி நிகழ்ச்சி

மாதவரம், ஜூலை.2-
மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை அரசு ஆதிதிராவிட நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் அரசு ஆதிதிராவிட நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் சத்யம் தொண்டு அறக்கட்டளை சார்பில் போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழி நிகழ்ச்சி சத்யம் தொண்டு அறக்கட்டளையின் நிறுவனரும் பள்ளி மேலாண்மைக்குழுவின் தலைவியுமான எஸ்.கலைமணி ஏற்பாட்டில் பள்ளியின் தலைமை ஆசிரியர் கிருஷ்ணன்குட்டி தலைமையில் நடைபெற்றது.முன்னதாக பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் பூவராகவன் அனைவரையும் வரவேற்றார். சத்யம் தொண்டு அறக்கட்டளை செயலாளர் நேசமணி, துணை செயலாளர் கற்பகம், பொருளாளர் ஒண்ணாப்பு, ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மணலி புதுநகர் சட்டஒழுங்கு ஆய்வாளர் புருஷோத்தமன் கலந்துகொண்டு பள்ளி மாணவர்களுக்கு போதைப்பொருள் பயன்படுத்துவதால் பாதிப்புகள் குறித்து தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பின்னர் போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றனர். இதில் மாணவர்கள், சகஆசிரியர்கள் மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள், பள்ளி மேலாண்மைக்குழு பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் முதுகலைதமிழ்ஆசிரியர் குமரகுரு அனைவருக்கும் நன்றி கூறினார்.

# குழந்தைகள் கடத்தலை ஒழிப்போம்: காவேரிப்பட்டினத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி



கிருஷ்ணகிரி, ஜூலை.2-
கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம் மற்றும் கிராமிய பெண்கள் முன்னேற்ற அறக்கட்டளை (RWDT) இணைந்து, குழந்தைகள் கடத்தலைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்குட்பட்ட ஜெகதாப் அரசு உயர்நிலைப்பள்ளியில் நேற்று நடைபெற்றது. முன்னதாக நேற்று காலை ஜெகதேவி அரசு உயர்நிலைப்பள்ளியிலும் இதேபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு தலைமை ஆசிரியர் நந்தகுமார் தலைமை வகித்தார். பட்டதாரி ஆசிரியர் உத்திரகுமார் வரவேற்புரை வழங்கினார். மாவட்ட சமூக நல அலுவலர் இரா. சக்தி சுபாஷினி, மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் கஸ்தூரி, குழந்தைகள் நலக் குழு உறுப்பினர் மோகன், காவல் ஆய்வாளர் எஸ். சசிக் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.பி. செந்தில்ராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பேச்சாளர்கள் குழந்தைகள் கடத்தல், குழந்தைத் தொழிலாளர் முறை, கட்டாய பிச்சையெடுப்பு, பாலியல் சுரண்டல், சட்டவிரோத தத்தெடுப்பு போன்ற குற்றங்கள் சமூகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளன என்பதை எடுத்துரைத்தனர். இத்தகைய குற்றங்களைத் தடுப்பதில் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் பங்கு மிகவும் முக்கியமானது என்றும், குழந்தைகளின் பாதுகாப்பில் அனைவரும் எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினர்.

மேலும், குழந்தைகளின் சட்டப்பூர்வ உரிமைகள், அவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் சட்டங்கள், குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புகளின் செயல்பாடுகள் மற்றும் சந்தேகத்திற்கிடமான சம்பவங்கள் குறித்து உடனடியாக தகவல் தெரிவிக்கும் நடைமுறைகள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவது ஒவ்வொரு குடிமகனின் சமூகப் பொறுப்பு என்றும் வலியுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்கள் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். பெற்றோர் மற்றும் பொதுமக்களும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உறுதியேற்றனர்.

நிகழ்ச்சியின் நிறைவில், கிராமிய பெண்கள் முன்னேற்ற அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பாளர் எஸ். வரலட்சுமி நன்றியுரை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகம் சார்பில், குழந்தைகள் ஆபத்தில் இருப்பதாகவோ அல்லது குழந்தைகள் கடத்தல், குழந்தைத் தொழிலாளர் முறை உள்ளிட்ட சம்பவங்கள் குறித்து சந்தேகம் ஏற்பட்டாலோ, உடனடியாக 1098 குழந்தைகள் உதவி எண்ணிற்கு தகவல் தெரிவித்து குழந்தைகளை பாதுகாக்க பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

"குழந்தைகள் நம் எதிர்காலம்; பாதுகாப்போம், முன்னேற்றுவோம்" என்ற முழக்கத்துடன் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

# “தவெக கூட்டணியில் உள்ளது மதிமுக; இனி எல்லாமே வெற்றிதான்” வைகோ உற்சாகம்



திருப்போரூர், ஜூலை.2-
செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் அருகே கலவாக்கம் பகுதியில் உயர் நீதிமன்ற உத்தரவின்படி சீமைக்கருவேல மரங்களை அகற்றும் பணியை பார்வையிட மதிமுக பொதுச்செயலாளர் வைகோ இன்று வருகை தந்தார். அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த வைகோ, ‘‘சீமைக்கருவேல மரங்கள் தமிழக சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகக் கூறினார். மதிமுக ஓட்டுக்காக இயங்கும் கட்சி அல்ல; நாட்டுக் காக செயல்படும் இயக்கம்’’ என்றார்.அரசியல் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளித்த அவர், அதிமுக எம்.எல்.ஏ.க்களின் ராஜினாமா விவகாரம் குறித்து பேசும்போது திமுகவை கடுமையாக விமர்சித்தார். குதிரை பேரம் குறித்து பேசுபவர்கள், முதலில் அதை தொடங்கியது யார் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களை ராஜினாமா செய்ய வைத்தது திமுகதான். தவெகவுடன் மதிமுக கூட்டணியில் உள்ளது. இந்த 5 ஆண்டுகள் மட்டுமல்ல, அடுத்த 5 ஆண்டுகளிலும் விஜய்தான் முதல்வராக வருவார்.எங்களுக்கு இனி எடுத்ததெல்லாம் வெற்றிதான் என்று வைகோ கூறினார். இதையடுத்து, கேள்வி எழுப்பிய செய்தியாளர் ஒருவருக்கும் வைகோவுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.வைகோவும் ஆவேசமாக எதிர்க் கேள்விகள் எழுப்பினார். பத்திரிகையாளர்களுக்கு எதிராக மதிமுக நிர்வாகிகளும் ஆவேசப்பட்டனர். இதனால் அங்கு அசாதாரண சூழல் ஏற்பட்டு பத்திரிகையாளர் சந்திப்பு பாதியிலேயே முடிந்தது.









# சன்னதிபுதுக்குளம் கலைநகரில் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கல்

சிவகங்கை, ஜூலை.2-
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே சன்னதிபுதுக்குளம் கலைநகர் கிராமத்தில், SERD நிறுவனம் சார்பில் பள்ளி செல்லும் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.நிறுவனர் பாண்டி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் கிராம மக்கள், மாணவர்கள் மற்றும் SERD நிறுவன நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,
Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161